# JOINT ACTION COUNCIL OF COLLEGE TEACHERS (JAC), TAMIL NADU

- **ASSOCIATION OF UNIVERSITY TEACHERS (AUT)**
- **TAMILNADU GOVERNMENT COLLEGE TEACHERS' ASSOCIATION (TNGCTA)**
- **MADURAI KAMARAJ, MANONMANIAM SUNDARANAR, MOTHER TERESA AND ALAGAPPA UNIVERSITY TEACHERS ASSOCIATION (MUTA)**


**ADDRESS: TNGCTA OFFICE, PROF.NARASINGAM ILLAM, 2, SYDOJI ST, TRIPLICANE, CHENNAI -02**

| | | |
|---|---|---|
| **Dr.R.DHAMOTHARAN** | **Dr.M.NAGARAJAN** | **PROF.S.SENTHILKUMAR** |
| **CONVENER** | **SECRETARY** | **TREASURER** |
| **9840316337** | **9443114403** | **9443177338** |


09.07.2018

**<u>சுற்றறிக்கை</u>**

அன்பார்ந்த தோழர்களே!

வணக்கம். ஜே.ஏ.சி பொதுக்குழுக் கூட்டம் 07.07.2018 அன்று சென்னையில் TNGCTA அலுவலகத்தில் பேரா.**S.சுப்பாராஜூ** ( தலைவர், MUTA ) அவர்கள் தலைமையில் நடைபெற்றது. அக்கூட்டத்தில் 7 வது ஊதிய விகிதங்கள் அமலாக்கம், அய்பெக்டோ போராட்டங்கள், ஜே.ஏ.சி கோரிக்கைகளின் தற்போதைய நிலை, மற்றும் இந்திய உயர்கல்வி ஆணையம் ஆகியவை குறித்து விவாதிக்கப்பட்டது.

1. **7ஆவது UGC ஊதிய விகிதங்கள் அமலாக்கம்:** தமிழகத்தில் கல்லூரி மற்றும் பல்கலைக்கழக ஆசிரியர்களுக்கான புதிய ஊதிய விகிதங்களை அமல்படுத்தி தமிழக அரசு 06.07.2018 அன்று ஆணை (அரசாணை எண்:145) பிறப்பித்துள்ளது. கோவா, அருணாசலப் பிரதேசம் மற்றும் ஜம்மு காஷ்மீருக்கு அடுத்து நான்காவது மாநிலமாக நாம் புதிய ஊதிய விகிதங்களைப் பெற்றுள்ளோம். தமிழக அரசு ஊழியர்களைப் போலவே நமக்கும் 01.01.2016 முதல் 01.10.2017 வரைக்குமான ஊதிய நிலுவைத் தொகை மறுக்கப்பட்டுள்ளது. இந்த ஊதிய மாற்றத்தினை விரைவில் பெறுவதற்கு துறை ரீதியான நடவடிக்கை எடுத்திட்ட தமிழக உயர்கல்விச் செயலருக்கும், நமது ஊதியக் கோரிக்கையினை தனது போராட்டங்களின் மூலம் தமிழக அரசினை வலியுறுத்தி வந்த ஜாக்டோ ஜியோ தலைமைக்கும் ஜே.ஏ.சி பொதுக்குழு தனது பாரட்டுக்களையும் நன்றியையும் தெரிவித்துக் கொள்கிறது. இந்த ஊதிய மாற்ற ஆணையை தமிழகம் முழுவதும் விரைந்து அமல்படுத்திட தக்க நடவடிக்கை எடுத்திடக் கல்லூரிக் கல்வி இயக்குநரை ஜே.ஏ.சி பொதுக்குழு கேட்டுக்கொள்கிறது.
2. **ஜே.ஏ.சி கோரிக்கைகள்:** ஜே.ஏ.சி கோரிக்கைகளில் முக்கியமாக 01.01.1996 முதல் பணிமேம்பாடு, இளையோர் மூத்தோர் முரண்பாடு களைதல் போன்றவை தொடர்பாக அரசாணை

வெளி வந்துள்ளது. 01.01.1996 முதல் பணிமேம்பாடு (CAS) கோரிக்கை மறுக்கப்பட்டும், இளையோர் மூத்தோர் முரண்பாடு களைதல் விசயத்தில் பாதிக்கப்பட்ட மூத்தோர் ஒரு முறை தனது இளையோருடன் ஒப்பிட்டு பலன் பெறலாம் என்றும் ஆணையில் உள்ளது. ஆனால், பணி மேம்பாடு கோரிக்கை தொடர்பாக அரசு வெளியிட்டுள்ள ஆணைகள் (101, 102) நமது ஆசிரியர்களுக்கு பாதிப்பினை ஏற்படுத்துவதாக உள்ளது. 01.04.2015 க்குப் பிறகு பணி மேம்பாட்டிற்குத் (CAS) தகுதி பெறும் ஆசிரியர் UGC விதிமுறைகள் 2010 இன் படியான API மதிப்பெண்களை இன்றைய நிலையில் முன் தேதியிட்டு 01.04.2015 முதல் கடைப்பிடிக்க வலியுறுத்துவது தவறாகும். இந்த முரண்பாட்டினை உயர்கல்விச்செயலர் கவனத்திற்கு கொண்டு சென்ற போது அவர் நிதித்துறையினைக் கை காட்டுகிறார். பணிமேம்பாடு (CAS) தொடர்பான ஆணைகள் (101, 102) இல் உள்ள சரத்துகள் நமது ஆசிரியர்களை பாதிக்காத வண்ணம் பணிமேம்பாடு தொடர்பான படிவத்தினை தக்க வகையில் வடிவமைக்க கல்லூரிக்கல்வி இயக்குநரை கேட்டுக் கொண்டுள்ளோம். மேலும், புதிய ஊதிய விகிதங்களை அமல்படுத்தும் முன்பு தகுதியுடைய அனைத்து ஆசிரியர்களுக்கும் பணிமேம்பாடுகளை (CAS) உடனடியாக வழங்கிட கல்லூரிக்கல்வி இயக்குநரை ஜே.ஏ.சி பொதுக்குழு கேட்டுக் கொள்கிறது

3. **அய்பெக்டோ தகவல்கள்**: 24.06.2018 அன்று பெங்களூருவில் கூடிய அய்பெக்டோ தேசியச் செயற்குழு அகில இந்திய மற்றும் மாநில நிலைமைகளை பரிசீலித்தது. புதிய UGC ஊதிய விகிதங்களை அமல்படுத்த மாநிலங்களுக்கு 100% நிதியுதவி, பகுதி நேர/தொகுப்பூதிய ஆசிரியர்களுக்கான ஊதியம் மற்றும் முறையான பணி நிலைமைகள், புத்தாக்க/புத்தொளி பயிற்சி முடிப்பதற்கான காலக்கெடுவை நீட்டித்தல் உள்ளிட்ட 11 அம்சக் கோரிக்கைகளை நிறைவேற்ற மத்திய மனிதவள மேம்பாட்டு அமைச்சகத்தினை வலியுறுத்தி

- 01.07.2018 முதல் 15.07.2018 வரை கையெழுத்து இயக்கம்,
- 19.07.2018 அன்று மாநில அளவிலான தர்ணா மற்றும்
- 03.08.2018 அன்று புதுடெல்லியில் பாராளுமன்றம் முன்னர் ஆர்ப்பாட்டமும் அன்றைய தினம் இந்தியா முழுக்க mass casual leave இயக்கமும் நடத்திட அய்பெக்டோ தேசியச் செயற்குழு முடிவு செய்துள்ளது.

இதனைப் பரிசீலித்த ஜே.ஏ.சி பொதுக்குழு திட்டமிட்டப்படி கையெழுத்து இயக்கத்தினை 15.07.2018 க்குள் முடித்து MHRD மற்றும் UGC க்கு அனுப்பிட வேண்டுமென தீர்மானித்துள்ளது. கையெழுத்து படிவம் பொறுப்பாளர்கள் மூலம் கிளைகளுக்கு அனுப்பி வைக்கப்படும். இப்படிவத்தை TNGCTA இணையதளத்திலும் பதிவிறக்கம் செய்துகொள்ளலாம். மேலும், இக்கோரிக்கைகளை வலியுறுத்தி கல்லூரிகள் முன்னர் **19.07.2018** அன்று ஆர்ப்பாட்டம் நடத்திடவும், **03.08.2018** அன்று எட்டு மையங்களில் பல்கலைக்கழகங்கள் முன்பு மாலை நேர

தர்ணா நடத்திடவும் முடிவு செய்யப்பட்டுள்ளது. மையங்கள் மற்றும் பொறுப்பாளர்கள் விவரம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது. இவ்வியக்கங்களை வெற்றிகரமாக நடத்திட மண்டல மற்றும் கிளைப் பொறுப்பாளர்கள் தக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். **04.08.2018** அன்று கூடும் அய்பெக்டோ தேசியச் செயற்குழு அடுத்த கட்ட நடவடிக்கைகள் பற்றி முடிவெடுக்கும்.

4. **இந்திய உயர்கல்வி ஆணையம் (HECI)**: மத்திய மனிதவள மேம்பாட்டு அமைச்சகம் UGC யைக் கலைத்து விட்டு அந்த இடத்தில் இந்திய உயர்கல்வி ஆணையம் (Higher Education Council of India) என்ற பெயரில் புதிய அமைப்பினை ஏற்படுத்துவதற்கான சட்ட வரைவினை மக்களின் கருத்தறிவதற்காக வெளியிட்டுள்ளது. இது உயர்கல்வியைத் தனியார் மயப்படுத்துவதை நோக்கிய மத்திய அரசின் நடவடிக்கையே. இந்தியாவில் உயர்கல்வி வளர முக்கியப் பங்காற்றிய (கல்வியாளர்களைக் கொண்ட) UGC யினை அகற்றிவிட்டு அந்த இடத்தில் ஒரு மையப்படுத்தப்பட்ட (அரசு அதிகாரிகளைக்கொண்ட) உயர்கல்வி ஆணையத்தைக் கொண்டு வருவது ஆபத்தானது. மேலும் இனிமேல் மாணியம் அளிப்பதை MHRD அல்லது அதனால் ஏற்படுத்தப்படும் வேறொரு அமைப்பு செய்யும். உயர்கல்வி மானியம் அளிப்பது அரசியல் ஆக்கப்படும். இந்த புதிய சட்ட வரைவை எதிர்த்து அதன் அபாயத்தினை உறுப்பினர்கள் மத்தியில் கொண்டு செல்வதென்றும், அதற்காக மேற்சொன்ன எட்டு மையங்களில் மேற்சொன்ன மண்டலப் பொறுப்பாளர்கள் ஜூலை 16 அல்லது17ஆம் தேதி ஜே.ஏ.சி சார்பாக அரங்கக் கூட்டங்கள் ஏற்பாடு செய்து நடத்திட முடிவு செய்யப்பட்டுள்ளது. அந்தந்த பகுதிகளில் உள்ள பல்கலைக்கழக ஆசிரியர் சங்கங்களின் பிரதிநிதிகளையும் கலந்து அவர்களையும் பங்கேற்கச் செய்யலாம். மேலும், 18.07.2018 அன்று நாம் இத்துடன் இணைப்பில் அனுப்பும் செய்தியினை உறுப்பினர்கள் தங்கள் இ-மெயில் முகவரியிலிருந்து MHRD க்கு மெயில் அனுப்ப வேண்டும். தமிழகத்திலிருந்து ஆயிரக்கணக்கான இ-மெயில்கள் இந்த புதிய அமைப்பு வேண்டாம் என்றும் UGC தொடர வேண்டும் என்றும் அனுப்புவதை உத்தரவாதப்படுத்த வேண்டும்.

**5. தனியார் பல்கலைக்கழகங்கள்**: தமிழக சட்ட மன்றத்தில் சிவ் நாடார் பல்கலைக்கழகம் மற்றும் சத்ய சாய் பல்கலைக்கழகம் ஆகிய இரண்டு தனியார் பல்கலைக்கழகங்கள் தொடர்பான மசோதாக்கள் நிறைவேறியுள்ளது. இப்பல்கலைக்கழகங்களில் 35% இடங்கள் மட்டுமே தமிழக மாணவர்களுக்கு கிடைக்கும். மீதி 65% இடங்கள் பிற மாநில அல்லது வெளிநாட்டு மாணவர்களுக்குப் போகும். உயர்கல்வியை வணிகமயமாக்கும் தமிழக அரசின் இத்தகைய செயலை ஜே.ஏ.சி வன்மையாகக் கண்டிக்கிறது.

ஜே.ஏ.சி சார்பாக HECI ஐ எதிர்த்து 16/17.07.2018 அன்று நடைபெறவுள்ள அரங்கக்கூட்டங்கள் மற்றும் 03.08.2018 அன்று நடைபெறவுள்ள மாலை நேர தர்ணா போராட்டத்திற்கு மையப் பொறுப்பாளர்களாக கீழ்க்கண்ட பொறுப்பாளர்கள் செயல்படுவர்.

| மறியல் மையம் | TNGCTA பொறுப்பாளர் | AUT/ MUTA பொறுப்பாளர் |
|---|---|---|
| சென்னை | பேரா.அன்பு செல்வன் (9444158920) | பேரா.P.வெங்கடேஷ் (9444032607) பேரா.ஆனந்த் |
| வேலூர் | பேரா.விக்னேஷ் | பேரா.சாந்தி |
| சேலம் | பேரா.இராஜேந்திரன் (9443551950 | பேரா.பிரகாஷ் |
| கோவை | பேரா.ரமேஷ் செல்: 9842236446 | பேரா.திருநாவுக்கரசு |
| தஞ்சாவூர் | பேரா.கோவிந்தராஜ் | பேரா.சேவியர் செல்வகுமார் |
| திருச்சி | பேரா. டேவிட் லிவிங்ஸ்டன் செல்:9865634340 | பேரா.லீமா ரோஸ் |
| மதுரை | பேரா.இராஜலெட்சுமி பேரா.அசோக் | பேரா.ரமேஷ் ராஜ் பேரா.பெரியசாமி ராஜா |
| நெல்லை | பேரா.அஜித் செல்: 9443760196 | பேரா.ஹெய்ஸ் தாசன் |

மேற்கண்ட ஜே.ஏ.சி போராட்டங்களுக்கு தேவைப்படும் செலவுகளை அந்தந்த மையத்திலுள்ள சங்கங்கள் தங்களுக்குள் பகிர்ந்து கொள்ள வேண்டும். ஜே.ஏ.சி கோரிக்கைப் பட்டியல் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது. இப்போராட்ட இயக்கங்களுக்கு அப்பகுதியில் உள்ள ஜே.ஏ.சி பொறுப்பாளர்கள் மற்றும் ஜே.ஏ.சி உறுப்பினர்கள் சிறப்புப் பேச்சாளர்களாகக் கலந்து கொள்வர்.

மேற்கண்டவாறு ஜே.ஏ.சி இயக்க ங்களை ஒவ்வொரு மையத்திலும் வெற்றிகரமாக நடத்திட ஒத்துழைப்பீர். நன்றி!

தோழமையுடன்,

**(பேரா.தாமோதரன்)**
அமைப்பாளர், JAC

இணைப்பு: : 1. கையெழுத்துப்படிவம்.
2. MHRD-க்கான இமெயில் செய்தி